**பெயர்– பரசுராமன்**

**தந்தை பெயர்– செந்தில்**

**நாள்–08.04.2024**

**OS NO. 19/2022**

**வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

எங்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை நடந்த போது எங்கள் சகோதரிக்கும் கொஞ்சம் நிலம் பாகமாக கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த நிலத்தை பிரதிவாதி என் தம்பி வாங்கிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தம்பி என் அப்பாவிற்கு பணத்தை கொடுத்து அந்த பணத்தை வைத்து தான் தாவா சொத்து என் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் பாகப்பிரிவினை நடந்த பின்பு தாவா சொத்தில் பாதியை என் தம்பி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தேன் என்றால் சரியல்ல. 60 செண்ட் இடத்தை என் தம்பிக்கு செட்டிலமெண்ட் எழுதிவைத்த பின்பு பட்டா என் தம்பி பெயருக்கு மாறி அதில் அவர் போர்வெல்போட்டும் கோழி பண்ணையும் வைத்து அவர் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல, நான் தான் போர்வெல் போட்டுள்ளேன். நான் எனது தம்பிக்கு செட்டில்மெண்ட் எழுதிய சொத்தை என் அனுபவத்தில உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். எந்த ஆவணம் அவ்வாறு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பட்டா, சிட்டா, அடங்கல், வாய்தாரசீது மற்றும் குழாய் ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்திருக்கிறேன். அவ்வாறு தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்னுடைய பாகத்திற்கான 70 செண்ட் இடத்திற்காகத்தான் என்றாலும், தாவா சொத்துக்கு அல்ல என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் போலியானவை என்றாலும், தாவா சொத்திற்கு சம்மந்தமற்றவை என்றால் சரியல்ல. நான் எனது பிராதில் 60 செண்டுக்கு பதிலாக 1 ஏக்கர் 20 செண்ட் இடத்தை எனக்கு தருவதாக பிரதிவாதி தெரிவித்தார் என்று எனது பிராதில் தெரிவித்திருக்கிறேன், அவ்வாறு எந்த உறுதிமொழியும் பிரதிவாதி எனக்கு எழுத்துமூலமாகவோ, வாய்மொழியாகவோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட சங்கதிகளை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக நான் உண்மைக்கு புறம்பாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரியிடமிருந்து என் தம்பி

நிலம் வாங்கிவிட்டார் என்ற பொறாமை காரணத்தினால் தான் இந்த வழக்கு நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 12 ஆண்டுகள் எந்த நடிவடிக்கையும் எடுக்காமல் பிரதிவாதி அனுபவத்தில் உள்ள சொத்து குறித்து தற்போது நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/–(R.ராஜேஸ்வரி,B.Com.,L.L.M.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.